சக்தி பௌண்டேஷன் - தமிழ் CCC வகுப்பு

# பன்றியை குருவாகக் கொண்டவன் [ஸ்ரீமத்தேவி பாகவதத்தில் இருந்து எடுக்கப்பட்ட கதை]

---

அந்த மஹாராராஜாவுக்கும் ராணிக்கும் ஒரே சந்தோஷம்! ஆம், பல வருஷங்களுக்குப் பிறகல்லவா அவர்களுக்கு இறைவன் அருளால் ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது? அதற்காக எத்தனை பூஜைகள் செய்திருப்பார்கள், தானதர்மங்கள் செய்திருப்பார்கள், கோயில்களுக்குச் சென்றிருப்பார்கள்? ***[ஒவ்வொரு பெற்றோரும் இதைச் செய்த பலன் தான் நாம் பிறக்கிறோம் என்று குழந்தைகளுக்கு உணர்த்தவும்]***குழந்தை பிறந்த மகிழ்ச்சியை ராஜா பல நாட்கள் கொண்டாடினார். காலம் சென்றது...

குழந்தைக்கு ராஜாவின் குரு "சப்தகன்" என்று பெயர் சூட்டினார். ஆனால் போகப் போக சப்தகன் சற்று மந்தமாகவே காணப்பட்டான். விளையாடப் போவதில்லை, சதா தூக்கம் தான், சாப்பாடுப் பழக்கமும் ஏனோ தானோ என்று தான் இருந்தது. எதையுமே காது பட நான்கு முறை சொல்ல வேண்டும். பெற்றோர்கள் வருத்தப்பட்டனர்.

உரிய வயதில் குருநாதர் கல்வியை சப்தகனுக்கு ஆரம்பித்தார். அவன் மூளையில் எதுவுமே ஏறவில்லை. ராஜாவும் ராணியும் கவலைப்பட்டனர், கோபப்பட்டனர். இப்படியுமா ஒரு பையன் இருப்பான் என்று சொல்லி வருந்தும் அளவுக்கு அவன் மூடனாகவே வளர்ந்தான்.

இதற்கு என்ன காரணம்?
முன் ஜென்மத்தில் ராஜாவும் ராணியும் ஆசிரியர்களாக இருந்தனர். அப்போது அவர்கள் இடம் சேர்ந்த மாணவர்களில் அறிவு குறைந்தவர்களைப் பாகுபாட்டுடன் நடத்தினர், திட்டினர், கேலி பேசினர்.படிப்பு ஏறாத மாணவர்களை ஒதுக்கினர்.

சரி சப்தகன் முன் ஜென்மத்தில் என்ன செய்தான்?
அவனும் சென்ற ஜென்மத்தில் ஆசிரியரிடம் ஒழுங்காகப் பாடம் கேட்கவில்லை. தனக்கு எல்லாமே தெரியும் என்று பல நாட்கள் பள்ளிக்கே வர மாட்டான். ஆனாலும் அவனுக்கு ஆசிர்யர் மீது மரியாதையும் அன்பும் இருந்தது.

நாம் செய்த செய்கின்ற செய்யப்போகும் ஒவ்வொரு செயலுக்கும் பலன் உண்டு அல்லவா? பாருங்கள் இப்போது...

காலம் செல்கிறது, பதினாறு வயதாகிறது சப்தகனுக்கும், ஒரு நாள் தன் அப்பாவிடம் சென்று தனக்கு இளவரசன் பட்டம் செய்து வைக்கும்படி வேண்டினான். ராஜாவுக்கு வந்ததே கோபம்.
"அடேய்! நீ கெட்ட கேட்டுக்கு அது ஒன்று தான் தேவையா? இந்த நாட்டை உன் கையில் கொடுத்தால் என்ன ஆகுமடா? மூடா? உன் பெயரைக் கூட உனக்கு ஒழுங்காக வாய் திறந்து சொல்ல வராது...என் முன் நிற்காதே போடா...போ...கண் முன் நிற்காதே!" என்று அடிக்காத குறையாய் விரட்டினார். அவன் மனம் மிகவும் புண்பட்டு விட்டது, ஆறுதலுக்காக தன் அம்மாவிடம் சென்றான்.

ராணியோ,"அடேய், உன் அப்பா செய்யாததை நான் செய்வேன், உன்னைக் கொண்டு போய் அப்படியே காட்டுக்குள் விட்டு விடுவேன், போய்விடு" என்று கத்தித் தீர்த்து விட்டாள்.

பெற்றோரின் வெறுப்பும் தன்னிரக்கமும் [selfpitty a very bad human quality] அவனை வீட்டை விட்டு எங்கோ வெளியே செல்லத் தூண்டிவிட்டது. அன்று இரவு யாருக்கும் சொல்லாமல் அவன் வீட்டை விட்டு வந்து விட்டான்.கால் போன போக்கில் போகிறான்....அதோ ஒரு அடர்ந்த காட்டுக்குள் வந்து விட்டான். ஒரே பசி, தாகம்.என்ன செய்வது?

அடே, திடீரென மழை வேறு பெய்கிறது. அரண்மனைக்குள் உலகமே தெரியாமல் வாழ்ந்த சப்தகனுக்கு எல்லாமே புதிது தான்.அதோ ஒரு குகை , அதற்குள் சென்றான் சப்தகன்.

அங்கே ஒரு குட்டி காட்டுப்பன்றி. முதன்முதலில் அதைப் பார்க்கும் இவனுக்கு அது வித்யாசமாக இருக்கிறது. அதன் அருகில் சில கிழங்குகள் கிடந்தன. இவன் அதை எடுத்து உண்டான், மழைத்தண்ணீரைக் கைகளில் பிடித்துக் குடித்தான்.

"ஆஹா! இந்தப் பன்றிக்கு என் மீது என் அம்மாவை விட அன்பு அதிகம்! அதான் எனக்குப் பசிக்கும் என்று கிழங்குகளை எனக்கும் வைத்திருக்கிறது. மழைக்கும் என் மீது அன்பு இருக்கிறதே!" என்று எண்ணிய அவன் அப்பன்றியிடம் அன்பு கொண்டான். அதைத் தடவிக் கொடுப்பான், வருடிவான், கட்டிக் கொள்வான், அதன் அருகில் படுப்பான். இப்படியே பல நாட்கள் சென்றன.

பன்றியும் அவனும் காடு முழுக்கச் சுற்றுவர். கிழங்குகள் பழங்குகளைப் பன்றி காட்ட இவன் அவற்றை எடுத்து அதற்கும் தருவான். அதையும் பெரிய மிருகங்கள் இடமிருந்து காப்பாற்றுவான்.

இதில் ஒரு வேடிக்கை என்ன என்றால், அவனும் பன்றியும் பேசிக் கொள்வார்கள். 'ஹ்ரூ ஹ்ரூ ஹ்ரூ" என்று பன்றி எழுப்பும் சப்தம் அவனுக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது.அவனும் அந்த சப்தத்தையே மனதில் ஆழப்படுத்திக் கொண்டு எப்போதும் கத்திக் கொண்டு திரிவான்.இவன் கத்த பன்றியும் கத்தும்.

காலம் செல்கிறது. அன்று விடிய விடிய மழை.குகைக்குள் அவனும் பன்றியும் சப்தம் போட்டு விளையாடிக் கொண்டு இருக்கிறார்கள். தூக்கம் வருகிறது. பன்றி படுத்து சப்தமுடன் குறட்டை விட, அவனும் வேடிக்கையாக "ஹ்ரூ" என்று சொல்லிக் கொண்டே வர, நடு ராத்திரி, திடீரென குகைக்குள் ஒரே வெளிச்சம்.

சப்தகன் கண்கள் கூசப் பார்த்தால், அன்னை காளி அவன் முன் ப்ரத்யக்ஷமாகி நிற்கிறாள்.
"அம்மா! நீ யார்?" என்றான்.

காளிக்கு சிரிப்போ சிரிப்பு," மகனே! தேவாதி தேவர்களும் முனிகளும் பக்தர்களும் யாரைப் பார்க்க வேண்டும் என்று துடிக்கிறார்களோ, அவள் உன் முன் நிற்கிறேன், என்னை அடையாளம் தெரியாத மூடனாகி விட்டாயே!?"

மூடன் என்றதும் சப்தகனுக்கு அழுகை வர, தேவி அவனைத் தேற்றினாள்.

"சப்தகா! தெரிந்தோ தெரியாமலோ காட்டுப்பன்றியின் சப்தத்தை நீ ஓயாமல் கத்திக் கொண்டே இருக்கிறாய். ஹ்ரூ சப்தம் என் முக்கிய மந்த்ர ஒலியில் ஒன்று ஆகும். அதை நீ உனக்கே தெரியாமல் பல ஆயிரம் முறை சொல்லி இருக்கிறாய். அதன் ரகசியம் தெரியாமல் இருக்கிறாய். மேலும் பன்றியின் மீது கொண்ட அன்பினால் அதனுடன் அந்த ஒலியில் பேசினாய். பன்றிக்குள்ளும் அதன் ஆன்மாவாய் நான் தானே இருக்கிறேன்? அதான் இன்று லட்சத்தி எட்டாம் முறை நீ கடைசியாய் ஹ்ரூ என்று சொன்னவுடன் உன் முன் வர வேண்டிய நிர்பந்தம் வந்தது....தெரிந்தோ தெரியாமமோ யார் மந்த்ர சப்தங்களைச் சொன்னாலும் பலன் உண்டு, அதிலும் விழிப்புணர்வுடன் மனதார அன்புடன் ஸ்திடமாக ஜெபிக்கும் போது அதன் பலன் அதிகம்., சரி உனக்கு என்ன வரம் வேண்டும்? கேள்!" என்றாள் காளிதேவி.

"அம்மா! எனக்கு அறிவு வேண்டும்! இதோ எனக்குத் துணை இருந்த இப்பன்றிக்கும் நீ அருள வேண்டும்!" என்று சற்றும் தன்னலம் இன்றி வேண்டினான் சப்தகன்.

அன்னையும் அவன் ஏன் மூடனாகப் பிறந்தான் என்ற முன் ஜென்மக் காரணத்தை எடுத்து விளக்கினாள்.அவனுக்கு அனைத்து ஞானத்தையும் தந்தாள். பன்றிக்கும் அடுத்த பிறவியில் பெரிய குருவாகும் வரம் தந்தாள்.

தெரிந்தோ தெரியாமலோ நாம் செய்யும் எச்செயலுக்கும் பலன் உண்டு.பன்றியின் கதியைப் பாருங்கள்!

சப்தகனும் மிக்க அறிவுடனும் விழிப்புணர்வுடன் காளி பக்தனாகி, மீண்டும் தன் ஊருக்குச் சென்றான். அப்போது பகைவர்கள் நாட்டைப் பிடித்து அவன் பெற்றோரைச் சிறை வைத்து இருந்தனர். வீரத்துடன் போரிட்டு அவர்களை வென்று நாட்டை மீட்டான். பெற்றொரை மீட்டான், நடந்ததைக் கூறி அவர்களையும் காளியிடம் பக்தி கொள்ள வைத்தான்.

தன் ஊரில் காளிக்கு ஓர் கோயில் எழுப்பியதுடன் காட்டுப்பன்றியின் ஞாபகமாக ஸ்ரீவராஹப் பெருமாள் கோயில் ஒன்றும் எழுப்பினான்.நல்ல அரசனாக நாட்டை ஆண்டான்.பன்றி உயிருடன் இருக்கும் வரை அதையும் அடிக்கடி சென்று பார்த்து வந்தான்.பன்றியையே தன் குருவாகக் கொண்டான்.

ஓம் சக்தி!